1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 100 பம்புசெட்டு களுக்கு ஒரு மெக்கானிக் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனல் 3, 4 யூனியன்களை இவர் கவனிக்க வேண்டியிருந்ததால், சிரமம் இருந்தது. 100 பம்புசெட்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும், இரண்டு ஒன்றியங்களிலுமுள்ள பழுதுபட்ட பம்பு செட்டுகளைப் பார்த்தால் போதும் என்று அரசு உத்தரவிடப் பட்டுள்ளது. அப்படி வந்த பிறகு இப்போது 99 சதவீதமும் நல்ல முறையில் ரிப்பேர் செய்யப்பட்டு நன்றாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜன் வாய்க்கால் பாலம்.

* வின 500—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் ஒன்றியம், குறிச்சி பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள ராஜன் வாய்க்கால் பாலத்தினை சீர் செய்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

வந்தவாசி—கள்ளக்குறிச்சி பேருந்துப்பணி.

* வின 501—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப் பணியினை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப்பணி தொடர்ந்து நடைபெறுவதால், மீண்டும் துவக்கச் செயற்குறிப்பு என்ற வினவுக்கு இடமே இல்லை.